# இரட்சிப்பு ஏப்ரல் 2026 யுனிகோடு




இரட்சிப்பு ஏப்ரல் 2026 யுனிகோடு

## இயக்குநர் கடிதம்...

FROM THE MISSION DIRECTOR'S DESK

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

2026ம் ஆண்டின் 4ம் மாதத்தைக்காண நம்மை வழிநடத்திய வானாதி வானவரை வாழ்த்திப் பணிவோம். இம்மாதத்தின் முதல் வாரம் புனித வாரத்தின் முக்கிய பகுதியாகும். 1ம் தேதி உளவு-புதன் (SPY WEDNESDAY), 2ம் தேதி கட்டளை-வியாழன் (MAUNDY THURSDAY), 3ம் தேதி பெரிய-வெள்ளி (GOOD FRIDAY), 4ம் தேதி கருப்பு-சனி (BLACK SATURDAY), 5ம் தேதி ஈஸ்டர்-பண்டிகை (EASTER SUNDAY) ஆகிய திருநாட்களை ஆசரிக்கிறோம். மட்டுமல்ல, பெரும்பாலான திருச்சபைகளில் இம்மாதத்தின் கடைசியில் நம்-பிள்ளைகள் மற்றும் அனைத்து மார்க்கத்தைச் சேர்ந்த பிள்ளைகளுக்கும் இயேசுவின் அன்பைப் பகிர்ந்தளிக்கும் விடுமுறை வேதாகமப் பள்ளி (VACATION BIBLE SCHOOL - VBS) தொடங்கப்படுகிறது. அனைத்து நிகழ்ச்சிகளிலும் பயபக்தியுடன் பங்குபெற்று, ஏப்ரல் மாதத்தின் ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ள உங்களை அன்புடன் வேண்டுகிறோம். .

'ஜெப-ஜன்னல்' 'வேதாகம-போட்டிகள்' 'அனைவரும்-ஊழியத்தில்' ஆகிய நமது ஊழிய திட்டங்களில் பங்குபெற உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். பத்திரிக்கை ஊழியங்கள், வலைதள ஊழியங்கள் (www.ratchippu.com), காணொலி-செய்தி ஊழியங்கள், புத்தக-வெளியீட்டு ஊழியங்கள், கைப்பிரதி ஊழியங்கள், NMS மிஷனரி ஊழியங்கள், திருச்சபை ஊழியங்கள் ஆகிய நமது ஊழிய இயக்குநரின் அனைத்து ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

ஜெப-விண்ணப்பங்கள், அனுபவ-சாட்சிகள் மற்றும் காணிக்கைகள் அனுப்புவோர் நமது ஊழிய இயக்குநரின் பெயருக்கு அனுப்பிவையுங்கள். தகவல்-தொடர்பு விபரம், வங்கி விபரம், UPI விபரம் மற்றும் QR CODE ஆகியவை பக்கம் 18-ல் மற்றும் நமது www.ratchippu.com வலைதளத்தில் தரப்பட்டுள்ளன. தேவகிருபை உங்களோடு இருப்பதாக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்
அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா

---

# தமிழ் வேதாகமங்களின் ஒற்றுமைத் திரட்டு ஏப்ரல் 2026

வேத-வரிகள்-182 **தமிழ் இணைத் திருமறை** சங்கீதம்-16:11

**சத்திய வேதம் (ரேனியஸ்-1840)**

சீவனுடைய வழியையெனக்குத் தெரியப்படுத்துவீர். உம்முடைய சமுகத்திலே சந்தோஷங்களின் பரிபூரணமும், உம்முடைய வலதுபாரிசத்திலே **செல்வபாக்கியங்களும்** என்றைக்குமிருக்கும்.

**பரிசுத்த வேதாகமம் (பவர்-1867)**

ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்; உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலதுபாரிசத்தில் நித்தியபேரின்பமும் உண்டு.

**திருவிவிலியம் (பொது-1995)**

வாழ்வின் வழியை நான் அறியச்செய்வீர்; உமது முன்னிலையில் எனக்கு நிறைவான மகிழ்ச்சி உண்டு; உமது வலப்பக்கத்தில் **எப்போதும் பேரின்பம்** உண்டு.

**பரிசுத்த பைபிள் (இ.ஆர்.வி-1998)**

சரியான வழியில் வாழ நீர் எனக்கு போதிப்பீர்; கர்த்தாவே, உம்மோடிருப்பதே எனக்கு பூரண ஆனந்தம் தரும், உம் வலதுபுறத்தில் தங்குவதே **என்றென்றும் இன்பம்** தரும்.

---

## ஜெப-ஜன்னல் ஜெப-விண்ணப்பங்கள் - ஏப்ரல் 2026

**கர்த்தரை நோக்கி மன்றாடுவோம் - COME! LET US ALL INTERCEDE TO GOD**

1)அகில உலக சமாதானத்துக்காக... அமெரிக்கா-ஈரான், இஸ்ரேல்-ஈரான், உக்ரைன்-ரஷ்யா போர்கள் நிறுத்தப்பட... கம்போடியா-தாய்லாந்து, இஸ்ரேல்-சிரியா, இஸ்ரேல்-ஹமாஸ் போர் நிறுத்தங்கள் மதிக்கப்பட... இலங்கை, பாகிஸ்தான், வங்கதேச பொருளாதாரம் சீரடைய... உலகம் முழுதும் எரிபொருள் விநியோகம் சீரடைய...

2)இந்திய மக்களின் நல்வாழ்வுக்காக... இந்தியாவில் மதவாத, பிரிவினைவாத சூழ்ச்சிகள் முறியடிக்கப்பட... சிறுபான்மை மக்களுக்குக்கு எதிரான ஒடுக்குதல்கள் நிறுத்தப்பட... இந்திய நீதிமன்றங்கள் பாரபட்சமின்றி நீதி வழங்க... ஒன்றிய அரசு ஜனநாயக நெறிமுறைகளையும் அரசியல் சாசனத்தையும் மதித்து நடக்க... 5மாநில தேர்தல்கள் நேர்மையாய் நடத்தப்பட... இந்தியாவில் எரிவாயு, பெட்ரோல், டீசல் விநியோகம் சீரடைய...

3)தமிழ்நாட்டு மக்கள் இன-மத-மொழி பேதமின்றி ஒற்றுமையோடு நல்வாழ்வு வாழ... தமிழ்நாட்டில் தொழில்கள்-வியாபாரம் செழிக்க...மத-வாத, பிரிவினை-வாத சக்திகள் கட்டுப்படுத்தப்பட... தமிழ்நாடு சட்டசபைதேர்தலில் நேர்மையானவர்கள் ஆட்சிக்கு தேர்ந்தெடுக்கப்பட...

4)திருமதி. சுந்தரிபாய் அவர்களின் முழு குடும்பமும் இரட்சிக்கப்பட...

5)திருமதி. ஷேரன் ஹெப்சிபா, திருமதி. சுமி ஜேஸ்மின், திருமதி. மெர்லின், திருமதி. பாக்கியா, திருமதி. திலகவதி மகேஷ், திருமதி. வைலட், திருமதி. சுதா, திருமதி. பிரியா சுதிர், திருமதி. புஷ்பாவதி, திருமதி. ஹனா விஜய் ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க...

6)பிரி-கே.ஜி முதல் பள்ளியிறுதி வரை, ஆண்டிறுதி - பொதுத்தேர்வு எழுதியுள்ள நம் பிள்ளைகளின்களுக்கு நல்ல ரிசல்ட் கிடைக்க... சிவா, கிளாட்சன், ஆஷெர், ஜெரிக், ஜெர்லின், பிரியங்கா, ஷாலோம் ஆகிய நம் பிள்ளைகளுக்கு சிறந்த ஞானம் வழங்கப்பட...

7)பிளஸ்-1, முதல் பி.ஹெச்.டி வரை, உயர்-கல்வி பொதுத்தேர்வு-செமஸ்டர் தேர்வு எழுதியுள்ள நம் பிள்ளைககளுக்கு நல்ல ரிசல்ட் கிடைக்க... பார்வதி, பிரேம், ஜாஸ்மின், சிப்ரா, ஷிஃபியா, ஷெரின் டேவிட், ஜாஷ்வா மேத்யூ, வில்சன், ஜோயல், ஜெனிபர், சாம், சிந்தியா பிரகாஷ் ஆகிய நம் பிள்ளைகளுக்கு சிறந்த ஞானம் வழங்கப்பட...

8)திருமதி. ஷேரன் ஹெப்ஸிபா அவர்களின் சுக பிரசவத்துக்காக...

9)சகோ.சவேரியம்மாள், திருமதி.ஈவ்லின் USA, திருமதி.செல்வி, திரு.லவ்ஸ்லி ஞானதாஸ், திருமதி.ஜேஸ்மின் ஞானதாஸ், திரு.அசரியா ஞானதாஸ், லீலா டேவிட், திரு.நெல்சன் (நகோமி), திரு.வெஸ்லி சாமுவேல், திரு.சுந்தர்சிங், திரு.அப்பன் டேவிட், திரு.ஜூலியன் ஆகியோரின் சரீர சுகத்திற்காக...

10) திருமதி. ராஜேஷ்வரி, திருமதி. சுந்தரிபாய், திரு. ஜெபனேசர், திருமதி. ஐரீன் வாக்கர், திருமதி. ஞானம் ஜெபராஜ், திருமதி. ஞானம் ராஜசேகர், Dr.ஷீபா, திருமதி. ஐலீன் செல்லத்துரை, திருமதி. ரத்னாபாய் சாம், திருமதி. வசந்தா அன்பன், திருமதி. சுகிர்தா சின்னதுரை ஆகியோரின் குடும்ப ஆசீர்வாதங்களுக்காக...

11) நமது ஊழிய ஆதரவாளர்களான திரு.கிப்ட்சன் தங்கராஜ், திருமதி. சார்லட் டேவிட், திருமதி. மியூரியல் புஷ்பராஜ் (நினைவு), திருமதி. ஜெயம் மேரி நெல்சன், திருமதி. V. மல்லிகா, திருமதி. ஐரீன் வாக்கர் (கிரேஸ் திவ்யா), திருமதி. ராணி சாமுவேல்ராஜ், திரு.J.R.டேவிட், திருமதி. ஷைனி ஜேம்ஸ், திருமதி. அரோமா சாத்ராக், திரு. சாம்சன் ஆபிரகாம், திரு. S.J.P.ராஜா, திரு.அசரியா ஞானதாஸ் ஆகியோரின் குடும்பங்களுக்காக...

===========================================================================

ஈஸ்டர்: சிறப்பு தேவசெய்தி...



# கல்வாரிப் பயணம்

# மீட்பின் வழி

## பாடு - மரணம் - உயிர்த்தெழுதல்

**என் கைகளையும் கால்களையும் உருவக்குத்தினார்கள்.** சங்.22:16பி

## CALVARY ROAD: THE PATH TO SALVATION

Rev.G. Sam Immanuel, Chairman, Palayapettai Pastorate, CSI Tirunelveli Diocese, Tirunelveli-5, South India

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, இயேசுவின் பாடு, மரணம், உயிர்த்தெழுதலை ஆசரிக்கிற இத்தருணத்தில் 'கல்வாரிப் பயணம் - மீட்பின் வழி' என்ற கருத்தைத் தியானிக்க அழைக்கப் படுகிறோம். மனிதவாழ்வு மரணத்தில் முடிவது இயற்கை. ஆனால், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை மரணத்தில் முடிந்துவிடாமல், உயிர்த்தெழுதலில் புதிய ஆரம்பத்தைத் தந்தது. வெற்றியை மட்டுமே இவ்வுலகம் கொண்டாடும்; ஆனால் இயேசுவின் பாடு; மற்றும் மரணத்தைக் கொண்டாடப் பணிக்கிறது கிறிஸ்துவின் சிலுவை. இயேசுவின் பாடுகள், நமது மீட்புக்காக கொடுக்கப்பட்ட விலை ஆகும்; இயேசுவின் மரணம், பிதாவோடு நம்மை ஒப்புர வாக்கிய பலி; இயேசுவின் உயிர்த்தெழுதல், சாத்தானின் தலையை நசுக்கிய வெற்றி. இந்த மூன்று நிலைகளையும் நாம் தியானிப்போம்.

**1. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பாடுகள்:**

கிறிஸ்துவின் பாடுகள், பாவ-மரணத்திலிருந்து நம்மை மீட்பதற்காக அவர் கொடுத்த அன்பின் விலை ஆகும். இயேசுவின் சிலுவைபப்பாடுகள் குறித்து சங்கீதக்காரர் தீர்க்கத்தரிசனமாகச் சொல்வதை பின்வரும் வசனங்களில் காண்கிறோம்: "என் எலும்புக ளெல்லாம் கட்டுவிட்டது, என் இருதயம் மெழுகுபோலாகி, என் குடல்களின் நடுவே உருகிற்று. என் பெலன் ஓட்டைப்போல் காய்ந்தது; என் நாவு மேல் வாயோடே ஒட்டிக் கொண்டது; என்னை மரணத்தூளிலே போடுகிறீர். பொல்லாத வர்களின் கூட்டம் என்னை வளைந்துகொண்டது; என் கைகளையும் என் கால்களை யும் உருவக் குத்தினார்கள்." என் எலும்புகளையெல்லாம் நான் எண்ணலாம்." (சங்.22:14-17). இயேசு சிலுவையில் அனுபவித்த உடல் மற்றும் மன ரீதியான வேதனைகள் சங்கீதம்-22ல் தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளன. மக்கள் அவரைப் பரியாசம் செய்ததையும், அவருடைய உடல் தளர்ந்து போனதையும் தீர்க்கதரிசனமாக சங்கீதக்காரர் கூறுவது குறிப்பிடத்தக்கது. மட்டுமல்ல, இயேசு வின் பாடுகள் குறித்து, "அவர் நம்முடைய மீறுதல்களினிமித்தம் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் நொறுக்கப்பட்டார்." என ஏசாயா சொன்ன தீர்க்கத்தரிசனமும் (ஏசா.53:5) சிலுவையில் நிறைவேறுவதை நாம் வேதத்தில் காண்கிறோம். இயேசு கெத்சமனே தோட்டம் முதல் கல்வாரி மலை வரை, சொல்லொணாத் துயரங்களை அனுபவித்தார். அவர் நமக்காக பட்ட

காயங்கள் நம் ஆத்துமாவின் காயங்களை ஆற்றும் மருந்தாகும். இயேசுவின் பாடுகள் உடல் ரீதியானவை மட்டுமல்ல, அவை மன ரீதியான வேதனைகளும் ஆகும். பாவத்தின் பாரத்தை அவர் தன்மேல் ஏற்றுக்கொண்டார். அவர் அடிக்கப்பட்டு, நொறுக்கப்பட்டு, காயப்படுத்தப்பட்டார். எபிரெயர் 4:15-ன்படி, அவர் நம்முடைய எல்லா பலவீனங்களையும் அறிந்தவராக நம்முடைய பாடுகளில் பங்கேற்றார்.

வாசனைத்திரவியம் தயாரிக்கப்பட வேண்டுமானால், மலர்களின் இதழ்கள் நசுக்கப்பட வேண்டும். அந்த மலர்கள் எவ்வளவு அதிகமாக நசுக்கப்படு கின்றனவோ, அவ்வளவாய் நறுமணம் வீசும். அதுபோலவே, இயேசுவின் பாடுகள் உலகிற்கு இரட்சிப்பு எனும் நறுமணத்தைக் கொண்டு வந்தது.

அன்பானவர்களே, இயேசு கிறிஸ்து நமக்காக அனுபவித்த பாடுகளைச் சற்று சிந்திப்போம். அவர் சரீரத்தில் ஏற்ற ஒவ்வொரு காயமும் ஒவ்வொரு தழும்பும், நம் மீறுதலுக்காகவே ஏற்பட்டது. இன்று உங்கள் இருதயம் வேதனையினால் காயப்பட்டிருக்கிறதா? மனிதர்களால் நீங்கள் புறக்கணிக்கப்பட்டு, 'நசுக்கப்பட்ட' அனுபவத்தோடு வந்திருக்கிறீர்களா? அப்படியானால், இந்த பாடுகளுக்காக நன்றி ஆண்டவரே, உம்முடைய தழும்புகளால் என் வாழ்வின் காயங்களை ஆற்றும் என்று சொல்லி உங்களை அர்ப்பணியுங்கள்.

**2. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மரணம்:**

தமது மரணம் குறித்து இயேசு சிலுவையில் முதலாவது குறிப்பிட்டது "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்? எனக்கு உதவி செய்யாமலும், நான் கதறிச் சொல்லும் வார்த்தைகளை கேளாமலும் ஏன் தூரமாயிருக்கிறீர்?" (சங்.22:1) என்பதேயாகும். ஆண்டவராகிய **இயேசு கிறிஸ்துவின் மரணத்தைக் குறிக்கும் வகையில்** சங்கீதக்காரர் பயன்படுத்தியுள்ள **'கைவிட்டீர்' 'தூரமாயிருக்கிறீர்' ஆகிய வார்த்தைகளை** இயேசு, சிலுவையில் சொல்வதை நாம் காண்கிறோம். சிலுவையில் இயேசு தம் ஜீவனை விட்டபோது, நம்முடைய பாவக்கடன்கள் அனைத்தும் தீர்க்கப்பட்டன. மரணம் ஒரு முடிவல்ல, அது நித்திய வாழ்விற்கான வழி என்பதை சிலுவை மரணம் நிரூபித்தது. சிலுவையில் இயேசு மரணத்தைச் சந்தித்தபோது, உலகத்தின் பாவங்கள் அனைத்தையும் சுமந்ததினால், பிதாவாகிய தேவன் அவரை கைவிட வேண்டிய திருந்தது. இது மரணத்தின் உச்சக்கட்டம் ஆகும். மேலும், இயேசுவின் உடைகளுக்காகச் சீட்டுப் போட்டதையும் சங்.22:18ல் தீர்க்கத்தரிசனமாக நாம் காண்கிறோம். "பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார்; இப்படிச் சொல்லி ஜீவனை விட்டார்." (லூக்.23:46). இயேசுவின் மரணம், ஒரு தோல்வியல்ல அது நமது மரணதண்டனையை ஏற்றுக்கொண்டு, நித்தியஜீவனை நமக்குக்கொடுத்த ஒரு பரிமாற்றம் (EXCHANGE).

ஒரு நீதிமன்ற வழக்கில், குற்றவாளிக்கு அவன் கட்ட முடியாத அளவு பெரிய தொகை அபராதமாக விதிக்கப்படுகிறது. அவன் சிறைக்குச் செல்லவேண்டிய நேரத்தில், வேறொருவர் வந்து அந்த அபராதத்தொகை முழுவதையும் செலுத்தி அவனை விடுவிக்கிறார். அதைப்போன்றது தான் இயேசுவின் மரணமும்; அது, நாம் செலுத்தவேண்டிய தண்டனைத்தொகையை செலுத்தி நம்மை விடுவித்தது.

அன்பானவர்களே, நமது எல்லா பாவக்கடனையும் இயேசு சிலுவையில் இரத்தம் சிந்தி, செலுத்திவிட்டார்; இனி நாம் விடுவிக்கப்பட்டவர்கள். ஆகவே, 'ஆண்டவரே, என் பாவக்கடன்களை தீர்த்ததற்காக உமக்கு நன்றி, இன்று நான் ஒரு புதுவாழ்வு வாழ உம்மிடம் வருகிறேன்' என்று சொல்லி அர்ப்பணிப்போம்.

**3. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்:**

“இயேசு, இங்கே இல்லை, அவர் தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்." என தேவதூதன் சொல்கிறான் (மத்.28:6). கிறிஸ்தவ விசுவாசத்தின் அஸ்திவாரமே உயிர்த்தெழுதல்தான். இயேசுவின் உயிர்த்தெழுதல் மரணத்தின் மீதான வெற்றி ஆகும். இயேசு உயிர்த்தெழுந்ததால், நாமும் உயிரோடு எழும்புவோம் என்ற நம்பிக்கை நமக்கு கிடைத்தது. இயேசு உயிர்தெழவில்லை என்றால் நம்முடைய பிரசங்கமும் விசுவாசமும் வீணாகப் போயிருக்கும். “என் இருதயம் பூரித்தது, என் மகிமை களிகூர்ந்தது; என் மாம்சமும் நம்பிக்கையோடே தங்கியிருக்கும். என் ஆத்துமா வைப் பாதாளத்தில் விடீர்; உம்முடைய பரிசுத்தவான் அழிவைக் காணவொட்டீர்" (சங்.16:9,10) இந்த வார்த்தைகளை இயேசு சிலுவையில் நிறைவேற்றிக்காட்டினார்.

ஒரு பட்டாம்பூச்சியின் வளர்ச்சியை பாருங்கள். அது ஒரு கூட்டுப்புழுவாகும்போது, கூடு, ஒரு கல்லறை போல மூடிக்கொள்கிறது. பார்ப்பதற்கு அது செத்துப்போனது போலத் தெரியும். ஆனால், குறித்த நேரத்தில் கூட்டை உடைத்துக்கொண்டு, அழகான வண்ணத்துப்பூச்சியாக அது வானில் பறக்கிறது. அதைப்போலவே, இயேசுவின் உயிர்த்தெழுதல் நம்முடைய பெலவீனமான வாழ்வை மகிமையுள்ள வாழ்வாக மாற்றும் வல்லமை கொண்டது.

அன்பானவர்களே! உயிர்த்தெழுந்த ஆண்டவர் இன்று நம் நடுவில் நிற்கிறார். ‘மரித்தாலும் பிழைப்பாய்’ என்று சொல்லி ஒரு புதிய ஆரம்பத்தைத் தந்தவர், இன்று செத்துப்போன நம் சூழ்நிலைகளை உயிர்ப்பிக்கப்போகிறார். கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலின் வல்லமையால் உங்கள் தோல்விகள் வெற்றிகளாக மாறட்டும். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

---

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஆயர் மற்றும் உழிய இயக்குநர்,
நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு, சாலிகிராமம், சென்னை. தமிழ்நாடு, தென்னிந்தியா

==========================================================================

**நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள் - Good Tidings Bible-Prints Ministries**

# ‘நல்ல விதைகள்’ சுவிசேஷ கைப்பிரதிகள்

‘GOOD SEEDS’ GOSPEL TRACTS

சுவிசேஷ ஊழிய பயன்பாட்டுக்காக நற்செய்தி கைப்பிரதிகளை வெளியிட்டு அவற்றை கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு விநியோகம் செய்துவருகிறோம். மட்டுமல்ல நற்செய்தி பணி செய்வோருக்கு கைபிரதிகளை இலவசமாய் வழங்கி வருகிறோம். ஒரு-வகை கைப்பிரதி (ONE BATCH) வெளியிட ஆகும் செலவு ரூ.3500/- மட்டும். கைப்பிரதிகளை SPONSOR செய்து அனைத்து மக்களும் இயேசுவை அறிந்திட உதவுங்கள். BATCH SPONSORSHIP செய்ய விரும்பும் அன்பர்கள் நமது ஊழிய இயக்குநரை தொடர்புகொள்ளுங்கள். கைப்பிரதிகளை SPONSOR செய்த தேவபிள்ளை களுக்கு எங்கள் நன்றி. எமது கைப்பிரதிகளை இலவசமாகப் பெற்று உங்கள் ஊழியங்களில் பயன்படுத்த அன்புடன் அழைக்கிறோம். ஆமேன்.


---

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஊழிய இயக்குநர்
நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு, சாலிகிராமம், சென்னை-93. தென்னிந்தியா

.==========================================================================

வேத ஆராய்ச்சி ....

# சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள்



சங்கீதம்-107 ஏப்ரல் 2026 எப்பிசோடு-107

AUTHOR: Rev. Dr. D. SURESH RAJAN

**முன்னுரை:**

வாழ்க்கையில் நாம் பல்வேறு நிலைகளில், காணாமல் போனவர்களாக, சிறைப்பட்டவர்களாக, நோயுற்றவர்களாக, புயலில் சிக்குண்டவர்களாக காணப்படுகிறோம். இப்பாடல், இறைமக்கள் அனுபவிக்கும் பலவித நெருக்கங்களிலும், இக்கட்டுகளிலும் இறைவன் எவ்வாறு அவர்களை மீட்டெடுக்கிறார் என்பதை விவரிக்கிறது. ஒவ்வொரு விடுதலைச் சரிதையின் முடிவிலும் நன்றி செலுத்த அழைப்பு வருகிறது. இது இறைமக்கள் எப்பொழுதும் நன்றியுணர்வு உடையவர்களாக இருக்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது.

1. **வழிதவறி அலைபவர்கள்:** (வச.4 - 9)

இஸ்ரவேல் மக்கள் பாலைநிலத்தில் அலைந்து திரிந்தனர். போகவேண்டிய வழி அவர்களுக்கு தெளிவாகத் தெரியவில்லை. பசி, தாகம், மனச்சோர்வு அவர்களை வாட்டியது. இக்கட்டான சூழநிலையில் அவர்கள் இறைவனை நோக்கி கூப்பிட்டனர். ஆண்டவர் அவர்களை விடுவித்து, நேரிய பாதையில் நடத்தி, அவர்கள் குடியிருக்கும் நகரை அடையச் செய்தார்.

நீங்கள் இப்போது எந்த பாலைநிலத்தில் அலைகிறீர்கள்? உங்கள் வாழ்க்கையில் தேவன் காட்டும் நேரிய பாதை எது? பாதை தெரியவில்லையா? வழிகாட்ட யாருமில்லையா? ஆண்டவரை நோக்கிக் கூப்பிடுவொம்; அவர், பாதையை நமக்குக் காட்டி, நமது ஆன்மாவின் பசி-தாகத்தை போக்குகிறார்.

2. **இருளிலும் சிறையிலும் கிடப்பவர்கள்:** (வச.10 - 16)

இறைவனுடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியாமல், அவரது அறிவுரைகளைப் புறக்கணித்து தங்கள் மனம்போல் வாழ முற்பட்டதால், மக்கள் காரிருளிலும் சாவின் நிழலிலும் கிடந்தனர். விலங்கிடப் பட்டவர்களாக துன்பப்பட்டனர். ஆனால் அவர்கள் ஆண்டவரை நோக்கிக் கூக்குரலிட்டபொழுது அவர் அவர்களை இருளிலிருந்து வெளிக்கொணர்ந்து, தளைகளைத் தகர்த்தார். வெண்கலக் கதவுகளையும் இரும்புத் தாழ்ப்பாள்களையும் உடைத்தார்.

நம் வாழ்விலும் பாவம் நம்மைச் சிறைபிடிக்கிறது; அது நம்மை தனிமைப்படுத்தி இருளுக்குள் தள்ளுகிறது. உங்களை அடைத்து வைத்திருக்கும் இரும்புத் தாழ்ப்பாள் எது? உங்கள் கடன்பட்ட நிலை, தீய பழக்கங்களுக்கு அடிமைம்பபட்ட நிலை போன்ற தாள்ப்பாள்களை உடைக்க ஆண்டவரை அழைத்திருக்கிறீர்களா? நாம் மனந்திரும்பி இறைவனை நோக்கி கூப்பிடும்போது, அவர் நம்மை விடுவிப்பதோடு, புதுவாழ்வையும் நமக்குத் தருகிறார். வெண்கலக்கதவுகள்

இரும்புத் தாழ்ப்பாள்கள் என்பவை மனிதசக்தியால் உடைக்கமுடியாத கட்டுகளைக் குறிக்கின்றன; அவற்றை. கடவுளால் மட்டுமே உடைக்க முடியும்.

**3. தீய நெறியால் நோயுற்றவர்கள்: (வச.17-22)**

மக்களின் தீய நெறிகள் மற்றும் தீச்செயல்களால் நோயும் துன்பமும் வந்தடைந்தது. வாழ்வின் விழிம்பிற்க்கு சென்று உணவை வெறுத்து, சாவின் வாயிலை மக்கள் நெருங்கினர். பரிதாபமான இந்த சூழலிலும் அவர்கள் இறைவனை கூவியழைத்த போது, அவர் தம் வார்த்தையை அனுப்பிக் குணமாக்கினார். தமது ஜனமாகிய அவர்களை அழிவிலிருந்து விடுவித்தார்.

தீயபழக்கங்களும், பாவமும் அழிவைக் கொண்டுவருகின்றன; ஆனால், ஆண்டவரது வார்த்தை நம்மை அழிவிலிருந்து மீட்டு குணப்படுத்துகிறது. குணமடைந்த நாம் அமைதியாயிராமல் நன்றிப்பலிகளையும், புகழ்ந்தேத்துதலையும் செலுத்தவேண்டும் என்பதை இந்தப்பாடலின் இப்பகுதி நமக்கு தெளிவுபடுத்துகிறது.

**4. புயலில் சிக்கிய மாலுமிகள்: (வச.23-32)**

கடலில் வாணிகம் செய்யச் சென்றவர்களுக்கு திடீர் புயல், கடல் கொந்தளிப்பின் காரணமாக ஏற்ப்படும் மரண பயம், தள்ளாட்டம், தடுமாற்றம் ஆகியவை இங்கு உருவாகப்படுத்தப்பட்டுள்ளன. வாழ்க்கையின் கடைசி அத்தியாயத்திற்க்கு வந்துவிட்டோம், இனி வழியே இல்லை என்னும் சூழ்நிலையில் இறைவனை நோக்கி அவர்கள் அபயமிட, அற்புதமாய் புயலை அமைதியாக்கி, அவர்கள் சேர விரும்பிய துறைமுகத்தில் சேர்த்தார் என இங்கு கூறப்பட்டுள்ளது.

அன்பர்களே! உங்கள் வாழ்வில் எழுந்துள்ள புயல் எது? அதை அமைதிப்படுத்த இயேசுவை உங்கள் படகில் ஏற்றிக்கொண்டீர்களா? வாழ்க்கை எதிர்பாராத புயல்களைக் கொண்டுவரும். தொழில், குடும்பம், உறவுகள் என்பவற்றில் சில சமயங்களில் நாம் கட்டுப்பாட்டை இழக்கிறோம். ஆனால், புயல்களுக்கும் அதிபதி இறைவனே; அவர் ஒரு வார்த்தையால் அமைதியை உண்டாக்கு கிறார். அவரது வழிநடத்துதலை அனுபவிக்கும் நாம் அவரது புகழை மக்களின் பேரவையிலும், பெரியோரின் மன்றத்திலும் எடுத்துரைக்க வேண்டும்.

**முடிவுரை: (வச.33-43)**

இறைவன் தீயோருக்கு ஆறுகளைப் பாலைநிலமாக்கி, செழிப்பான நிலத்தை உவர்நிலமாக்கு கிறார். ஆனால், எளிவர்களாகிய தம் ஜனங்களுக்கு பாலை நிலத்தை நீர்த்தடாகமாகவும், வறண்ட நிலத்தை நீருற்றுகளாகவும் மாற்றி, அவர்களை ஆசீர்வதிக்கிறார்.

இந்தப் பாடல் முழுவதும், மனிதனின் பிரச்சனை மாறுபட்டாலும், தேவனின் பதில் ஒன்றாகவே உள்ளது. இறைமக்கள் ஆண்டவரைக் நோக்கி வேண்டுதல் செய்தபொழுது அவர் அவர்களை விடுவித்தார். ஆகவே எந்த நிலையில் இருந்தாலும், நாம் அவரிடம் செல்லலாம். அவர் நல்லவர், அவரது பேரன்பு என்றென்றும் உள்ளது. உங்கள் அனைவருக்கும் உயிர்த்தெழுந்த திருநாள் வாழ்த்துக்கள். ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

சங்கீதங்கள் கற்றுத்தரும்விலையேறப்பெற்ற சத்தியங்கள். தொடரும்......

ஆசிரியர்: அருட்திரு. அறிவர். டி. சுரேஷ் ராஜன், தலைவர் (இந்திய மறை மாநாடு), குளோபல் மெத்தடிஸ்ட் திருச்சபை.

AUTHOR: REV. DR. D. SURESH RAJAN, CONFERENCE SUPERINTENDENT, INDIA ANNUAL CONFERENCE, GLOBAL METHODIST CHURCH IN INDIA.

# வேதாகம போட்டி-185 (மார்ச் போட்டிகள்)

## சரியான பதிலளித்தோர்

1) அமலியா லோகநாதன் (திலை)
2) அமிர்தகனி பொன்ராஜ் (சென்)
3) ஏஞ்சல் C. (திலி)
4) ஏஞ்சல் டார்வின் (கன்)
5) ஏஞ்சல் ராஜதுரை (சென்)
6) ஏஞ்சலின் யோசபாத் ராஜா (சென்)
7) ஏஞ்சலின் ரூஸ்வெல்ட் (சென்)
8) ஏஞ்சலின் வில்லியம்ஸ் (சென்)
9) அன்னாள் ஜெபக்கனி (கோய)
10) அனி பாய் ஜாண் (திலி)
11) அரோமா சாத்ராக் (திலி)
12) அருள்செல்வி ஜாண்ஸன் (திலி)
13) ஆஷா அனி (சென்)
14) பெல்சி தங்கராஜ் (சென்)
15) பெனிட்டா பிராங்க்ளின் Dr. (சென்)
16) பியூலா ராஜசெல்வன் (கோய)
17) பிரீனா மேக்ஸின் தெபோரா (ராணி)
18) பிரிஸ்கில்லாள் பொன்ராஜ் (தென்)
19) செலினா பென்சி வில்சன் Dr. (குவை)
20) செலினா வின்சென்ட் (திலி)
21) சந்திராபாய் மாசிலாமணி (சென்)
22) சந்திரலேகா (ஆபி)
23) சந்திரா மேரி விக்டர் (பெங்)
24) சந்திரா சாமுவேல் (திலி)
25) சார்லஸ் ஃபின்னி Dr. (சென்)
26) சார்லஸ் சாலோமோன் IAF (புனே)
27) சார்லட் டேவிட் (சென்)
28) கிறிஸ்டல் ஜாய் யோபு (திதூ)
29) கிறிஸ்துதாஸ் (ஈரோ)
30) கிறிஸ்டி ஞானராஜ் (சென்)
31) கிறிஸ்டி மெர்சி ராஜ்குமார்(தூத்)
32) கிறிஸ்டி பொன்னுசாமி (மது)
33) சிசிலி புஷ்பம் டேவிட் (சென்)
34) சிந்தி ஜாஷ்வா (தஞ்)
35) டெய்ஸி ஜெபதாஸ் (திசி)
36) டெய்ஸி சாம் (கன்)
37) டேனியல் தாமஸ் (திலி)
38) டேனிங் சொர்ணா ஜெஸ் (சென்)
39) தெபோராள் D. (சென்)
40) தேவபொன்மலர் ஜோனத்தான் (சென்)
41) தேவநேசம் ராஜாசிங் (சென்)
42) டோராபாய் ஜூலியஸ்(சென்)
43) தீபா மெர்சி கிறிஸ்டோபர்(சென்)
44) தேவகனி எமிலிசன் (சென்)
45) தேவகிருபை முத்து சகரியா (பாண்;)
46) எபெனேசர் டேனியல் (கத்)
47) எலிசபெத் அலெக்ஸாண்டர் (சென்)
48) எமிமாள் ஜெஸிக்கா சாமுவேல் (மது)
49) எஸ்தர் டி.ஆர். (திலி)
50) எவாஞ்சலின் ஜோன்ஸ் Dr. (சேல)
51) கெத்ஸி தம்புராஜ் (பெங்)
52) குளோரி ரவீந்திரன் (திலி)
53) ஞானம் ஜெபராஜ் (திலி)
54) ஞானராணி G. (திளு)
55) ஞான ரோஸ் G. (திளு)
56) ஞானசெல்வி மோசஸ் (அமெ)
57) ஞானசுந்தரி நாகராஜன் (திலி)
58) கிரேஸ் பொன்மணி ரெக்ஸ் (சென்)
59) கிரேஸ் பிரின்ஸ் (தென்)
60) கிரேஸியா ஜெயபால் (சென்)

61) கிரிசெல்டா செய்லர் (சென்)
62) ஹெலென் ஜான்சிராணி (திலி)
63) ஹெலென் ஜெனிபர் பாண்டியன் (சென்)
64) ஹெலென் I. (திரு)
65) ஹெலன் திலக் (தூத்)
66) ஹேமா அஜீத் (சென்)
67) ஹேமா கேப்ரியேல் (பெங்)
68) ஹெப்சி அசரியா (பாண்)
69) ஹிம்லா ராஜகுமாரி (சென்)
70) ஹன்ஸா மங்களராஜ் (சென்)
71) இளவரசிஜோபிதா சுந்தரராஜன் (கோய)
72) இன்பவல்லி கலைச்செல்வன் (மது)
73) இந்திரா கெத்ஸி டேவிட் (திலி)
74) ஜமீலா செல்வராஜ் (சென்)
75) ஜமுனா K. (சென்)
76) ஜேன்ஸ் (ஜான்ஸி) (கோய)
77) ஜேன் தர்மராஜ் (திலி)
78) ஜான்ஸி சந்தியா (திலி)
79) ஜாஸ்மின் ஞானதாஸ் (சென்)
80) ஜாஸ்மின் ஜீவன் டேவிட் (மது)
81) ஜெபா ஜெயராஜ் (சென்)
82) ஜெபக்குட்டி மோசஸ் (திலி)
83) ஜெபரஞ்சிதம் மெர்லின் (தூத்)
84) ஜெபா ஜோன்ஸ் (கோய)
85) ஜெனிலா S. (சென்)
86) ஜெரின் ஸ்டீபன் (மும்)
87) ஜெஸி செல்லதுரை (கோய)
88) ஜெஸி ஜெயக்குமார் (திலி)
89) ஜெஸிதா அகஸ்டின் (ஆபி)
90) ஜெயா அல்பர்ட் (தஞ்)
91) ஜெயந்திஹேனா கிறிஸ்டோபர் (அரி)
92) ஜெயசீலி மார்டின் (தூத்)
93) ஜாய்ஸ் பாண்டியன் (சென்)
94) ஜூலியட் அசோக் குமார் (தூத்)
95) ஜூலியட் ஜெயக்குமார் (திலி)
96) ஜஸ்டினா ஜெபராணி ராஜீவ் (அரி)
97) கலா கிருபாகரன் (திலி)
98) கலையரசி செல்வராஜ் (சென்)
99) கஸ்தூரி எலியாஸ் (திலி)
100) கிருபாவதி எஸ். (சென்)
101) கோயில்பிள்ளை ஞானஂதாய் (தென்)
102) லதா மைகேல்ராஜ் (சென்)
103) லீலா ஜோஸப் (கோய)
104) லில்லி ஜாண்ஸன் (சென்)
105) லிஸி டென்சிங் (திலி)
106) லோவிசாள் ராஜேந்திரன் (தென்)
107) மலர்விழி சாம்ஸன் (திரு)
108) மல்லிகா ஜெபராஜ் (தூத்)
109) மல்லிகா V. (சென்)
110) மரியாள் ஜே.எஸ் (தூத்)
111) மேபா ஞான சுகி (கன்)
112) மெஜிலா ஜோஷ்வா (தூத்)
113) மெர்லின் தேவராஜ் (சென்)
114) மெர்லின் சாமுவேல் (சென்)
115) மெரிட்டா ஜெயபாலன் (திசி)
116) முத்துமாலினி அலீஸ் (கோய)
117) நதியா லாரன்ஸ் (திரு)
118) நேச மாலா பீட்டர் (திலி)
119) நிக்ஸன் எவர்பிரைட் (திலி)
120) ஆலிவ் ஜெயபாலன் (கோய)
121) ஒலிவியா லேங்டன் (திசி)
122) பாக்யபாய் ஆரோன் (திலி)
123) பமீலா எட்வின் (கன்)
124) பெர்சி பால் பொன்சிங் (தூத்)
125) பிங்க்லின் சந்தோஷ் (சென்)
126) பொன்மணி உத்தமசிங் (சென்)

127) பிரேமா ஸ்டாலின் (சென்)
128) பிரேம்குமாரி ஜெய்சிங் (சென்)
129) பிரின்ஸ் தயாநிதி (சென்)
130) பிரிசில்லா சந்திரதாஸ் (சென்)
131) பிரிஸ்கில்லாள் சசி (கோய)
132) ராஜபிரமீளா (திதூ)
133) ராஜ்மேரி சார்லஸ் (கேர)
134) ரமோலா அதிசயராஜ் (திலி)
135) ராணி ஃபுளோரா (தென்)
136) ராணி பிரபாகர் (திலி)
137) ராணி சாமுவேல்ராஜ் (சென்0
138) ரத்னாவதி பாண்டியன் (சென்)
139) ரியஸ்ஸி ஜாண் சிங் (கோய)
140) ரூபவதி நோபிள் (திலி)
141) ரூத் ஜாண்ஸன் (திலி)
142) ரூத் நரேஷ் (சென்)
143) சலோமி மனோகர் Dr. (சென்)
144) சாரா பாலசிங் (மது)
145) சரோஜா செல்வராஜ் (சென்)
146) சரோஜினி எலிசபெத் (சென்)
147) செல்வ அமுதா ஜார்ஜ் (சென்)
148) செல்வ பென்சி ஆபேல் (ராணி)
149) செல்வராஜ் K. (கோய)
150) செல்வராணி ஆல்பர்ட் (சென்)
151) செல்வி அமிர்தராஜ் (திளு)
152) செல்வி S. (சென்) (சென்)
153) செல்வின் S. (தூத்)
154) செல்வின் துரை Pr. (மஹா)
155) சாந்தி ஆல்பர்ட் (தென்)
156) சாந்தி ஜெயசீலன் (சென்)
157) சாந்தி ரோஸ் (கோய)
158) ஷர்மீளா செல்வராஜ் Dr. (கட)
159) ஷீலா இஸ்ரேல் (திசி)
160) ஷெரீன் ஜெபராஜ் (திளு)
161) சில்வியா ஃபின்னி Dr. (சென்)
162) சவுந்தரம் சாலமோன் (சென்)
163) ஸ்டெல்லா டேவிட் (தூத்)
164) ஸ்டெல்லா சூசைய்யா (தூத்)
165) சுகந்தி ஜெயச்சந்திரன் (கோய)
166) சுகிர்தா சின்னதுரை (திலி)
167) சுஜாதா சாமுவேல் (சென்)
168) சுசீலா தியோடர் (திசி)
169) சுவர்ணலதா அற்புதராஜ் (சென்)
170) தனசீலி ஞானராஜ் (சென்)
171) தெல்மா ஸ்டேன்லி (மது)
172) உமா குளோரி (சென்)
173) உஷா ஜெபராணி Sis. H. (திளு)
174) வனஜா மாரிமுத்து (மது)
175) வசந்தா அன்பன் (திலி)
176) வசந்தா சந்திரசேகர் (கோய)
177) வசந்தா துரைராஜ் (ஓஎப்டி)(திசி)
178) வசந்தா சேகர் (சென்)
179) வசந்தி கருணாகரன் (சென்)
180) வசந்தி வாசன் (சென்)
181) விஜயராணி A. (சென்)
182) விஜி டேனியல் (செங்)
183) விமலா ஜெயக்குமார் (தூத்)
184) வினோலியா ஜேம்ஸ் (தூத்)
185) வினோலியா பால் (மது)
186) வினோலியா வில்சன் (திதூ)
187) வைலட் கிறிஸ்டோபர் (திலி)
188) வைலட் சைரஸ் (திலி)

## வேதாகம போட்டி-185 மார்ச் போட்டிகள் - யோபு புத்தகம் சரியான விடைகள்

1. நீரென்னை போதியும் - இர. பக்கம்.2
2. மனத்தாழ்மை - இர. பக்கம்.19
3. பரம்பரைச் சொத்து - இர. பக்கம்.6
4. எலிப்பாஸ் யோபு.22:1,9
5. பிகமோத் யோபு.40:15
6. லிவியாதான் யோபு.41:1,33
7. சரி - யோபு. 21:30
8. சரி - யோபு. 12:6
9. தவறு - யோபு. 36:26
10. ஈ - ஞானத்தை யோபு. 1:9
11. இ - வருடங்கள் யோபு. 9:32
12. ஆ - அற்பமாய் யோபு. 4:2
13. யோபுவின் மனைவி யோபு. 7:9-10
14. கல்தேயர் யோபு. 2:7, 19-23
15. நீர்த்துளிகள் யோபு. 1:2,3:15, 8:15

=====================================================================================

# ‘அனைவரும் ஊழியத்தில்’

### ஒவ்வொருவரும் 30-கைப்பிரதிகளை விநியோகிக்கும் திட்டம்

இத்திட்டத்தின் செயல்முறை பின்வருமாறு

1. **இத்திட்டத்தில் பங்குபெறுவோர்:** இரட்சிப்பு பத்திரிக்கையின் சந்தாதாரர்கள், நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழிய் ஆதரவாளர்கள், வேதாகம போட்டியின் பங்காளர்கள், ஜெப-ஜன்னல் ஜெப பங்காளர்கள் ஆகிய அனைவரும்.

**2.நாங்கள் செய்வது:** மேற்கண்ட நமது ஊழிய ஆதரவாளர்களான உங்கள் அனைவருக்கும் வருடம் ஒருமுறை 30-கைப்பிரதிகளை அனுப்பிவைப்போம். ஒவ்வொரு காலண்டர் மாதத்திலும் தெரிந்தெடுக்கப்பட்ட 30 அன்பர்களுக்கு தபால் மூலம் கைப்பிரதிகள் அனுப்பிவைக்கப்படும்.

**3. நீங்கள் செய்யவேண்டியது:** நீங்கள் வீட்டிலிருந்தவாறே உங்கள் அண்டைவீட்டார், காய்கறி விற்போர், பால் போடுவோர், எலக்ட்ரீஷியன், பிளம்பர், கார்பென்டர், டிரைவர், தூய்மை பணியாளர், வீட்டு-வேலைசெய்வோர், சமையல் எரிவாயு வெண்டர், தபால்க்காரர்கள், மெக்கானிக்குகள் ஆகியோரில் இயேசுவை அறியாதவர்களுக்கு ஜெபத்துடன் கைப்பிரதிகளை வழங்க வேண்டும். இத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு நல்கி நற்செய்தி பரவிட உதவுங்கள்.

**பின்-குறிப்பு:** இத்திட்டத்தில் பங்குபெற இயலாத நிலையில் இருப்பவர்கள் உங்கள் இயலாமையை வாட்ஸ்அப் மெஸேஜ் வாயிலாக எங்களுக்கு தெரியப்படுத்தலாம். எங்கள் வாட்ஸ்-அப் எண்: 9789914463.

அருட்திரு. தர்மராஜா, ஊழிய இயக்குநர், இரட்சிப்பு ஊழியங்கள், சென்னை-93, தென்னிந்தியா

=====================================================================================

# வேதாகம போட்டி-186 (ஏப்ரல் போட்டிகள்)

**சங்கீதம் புத்தகம் - சங்கீதங்கள் 1 முதல் 30 வரை**

3 கேள்விகள் இரட்சிப்பு பத்திரிக்கையிலிருந்தும் (பக்கம் 2,4,5,6,19)

12 கேள்விகள் வேதாகமத்திலிருந்தும் கேட்கப்படுகின்றன

வேதவசன இருப்பிடம் - இரட்சிப்பு பத்தரிக்கை பக்கம் எண் அவசியம் எழுதவேண்டும். பதில்கள் அனுப்ப கடைசிநாள்: 25-04-2026

1. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மரணத்தைக் குறிக்கும் வகையில் சங்கீதக்காரர் பயன்படுத்தியுள்ள வார்த்தைகள் எவை?
2. சங்கீதம்-16:11ல் காணப்படும் '**நித்தியபேரின்பம்**' என்ற சொல்லுக்கு, மற்ற 3 இணைத் திருமறைகள் பயன்படுத்தியுள்ள வார்த்தைகள் எவை?
3. சங்கீதம்-16:10ல் காணப்படும் '**பரிசுத்தவான்**' என்ற வார்த்தை, இயேசுவைக் குறித்து எழுதப் பட்டிருக்கிறது என்பதை உறுதிப்படுத்துகிறவர்கள் யார்?
4. 'தேவன் இல்லை' என்று தன் இருதயத்தில் சொல்லிக்கொள்பவன் யார்?
5. காற்று பறக்கடிக்கும் பதரைப்போல் இருக்கிறவர்கள் யார்?
6. குறைவற்றதும் ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாய் இருப்பது எது?
7. 'கர்த்தர் நீதிமான்களின் வழியை அழித்திருக்கிறார்' - **சரியா தவறா**?
8. 'ராஜ்யம் கர்த்தருடையது; அவர் ஜாதிகளை இகழுகிறவர்' - **சரியா தவறா**?
9. 'கர்த்தருடைய சத்தம் அக்கினி ஜுவாலைகளை பிளக்கும்' - **சரியா தவறா**?
10. '**இது**' கர்த்தருடையது; தேவரீரின் ஆசீர்வாதம் உம் ஜனத்தின்மேல் இருப்பதாக:
    அ) இரட்சிப்பு ஆ) வல்லமை இ) மகிமை ஈ) கிருபை
11. துன்மார்க்கரும் தேவனை மறக்கிற ஜாதிகளும் '**இங்கு**' தள்ளப்படுவார்கள்:
    அ) படுகுழியில் ஆ) சமுத்திரத்தில் இ) பாதாளத்தில் ஈ) நரகத்தில்
12. அந்நிய தேவனை நாடி பின்பற்றுகிறவர்களுக்கு '**இவைகள்**' பெருகும்:
    அ) துன்பங்கள் ஆ) சோதனைகள் இ) பாவங்கள் ஈ) வேதனைகள்
13. சொக்கத் தங்கத்திலும் உயர்ந்தவை! கூட்டுத்; தேனிலும் இனியவை!
    நெகிழ்;ச்சி, இவை இதய மகிழ்ச்சி! உண்மை, இவை எல்லாம் செம்மை!
    **இவை எவை? இவை எவை?**
14. கண்ணிகள் கொட்டிடும் மழையில்!
    கந்தகம் கொதித்திடும் கோப்பையில்!
    கனல்காற்று அனல்வீசும் கோடையில்! **யாருக்கு, இது யாருக்கு**?
15. தேடுவேன் நான் தேடுவேன், தேவனிடம் தேடுவேன்!
    தேடச்சொன்னதால் தேடுவேன், தேவனுடையதை தேடுவேன்!
    மறைக்கவேண்டாம் தேடுவேன், மனதாரத் தேடுவேன்! **தேடுவது எதை?**

---

பதில் அனுப்பவேண்டிய முகவரி: திருமதி.ஜெயசீலி தர்மராஜா, எஃப்-1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ், எண்: 4/2-A பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை-93. வாட்ஸ்-அப்: 9789914463

==========================================================================================

**கர்த்தருடைய நாமங்களின் மகத்துவங்கள்**

ஆசிரியர்: சகோ. சி. ஏஞ்சல்



பாகம்-83 ஏப்ரல் 2026 எப்பிசோடு-83

# ஜீவனும் தீர்க்காயுசுமானவர்

## THE LORD WHO IS LIFE AND LONGEVITY

## El hachiim veorech himim

### ஏல் ஹாச்சிம் வியொரெச் ஹிமிம்

உன் தேவனாகிய கர்த்தரே உனக்கு ஜீவனும் தீர்க்காயுசுமானவர்.
உபா.30:20பி

The Lord your God is your life, and the length of your days. Deu. 30:20a

மரித்தேன், ஆனாலும் இதோ, சாதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன் என்று சொன்ன இயேசுவானவரின் நாமத்தில் இரட்சிப்பின் விசுவாசிகளுக்கு ஈஸ்டர் தின நல்வாழ்த்துக்கள். உயிர்த்தெழுந்த இயேசு, நம்முன் ஜீவனையம் மரணத்தையும், ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் வைக்கிறார்.

**உபா.32:46,47** ஜீவனாய் இருக்கிற வேதவார்த்தைகளை நீங்களும் உங்கள் பிள்ளைகளும் கைக்கொள்ளும்படி தேவன் அழைக்கிறார்; ஏனெனில், நியாயப் பிரமாண வார்த்தைகள் ஜீவனாய் இருக்கிறது. யோர்தான் போன்ற தடைகளைக் கடந்து ஆசீர்வாதங்களை சுதந்தரிக்கும் காலத்தில் உங்கள் நாட்களை நீங்கள் நீடிக்கப்பபண்ணுவீர்கள்.

**உபா.32:40,39** "நானே அவர், நான் என் கரத்தை வானத்துக்கு நேராக உயர்த்தி, நான் என்றென்றைக்கும் ஜீவித்திருக்கிறவர்; என்னோடே, வேறே தேவன் இல்லை உயிர்ப்பிக்கறவரும், சொஸ்தப்படுத்துகிறவரும் நானே" என்று கர்த்தர் சொல்கிறார்.

**உபா.30:1-20** எழுதியிருக்கிறபடி, முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் கர்த்தருடைய சத்ததுக்கு நாம் செவிகொடுக்கும்போது, நாம் கையிட்டுச் செய்யும் வேலைகளிலும், கர்ப்பத்தின் கனிகளிலும், நிலத்தின் கனிகளிலும், சகல நன்மைகளிலும் பரிபூரணமுண்டாகச் செய்வார்.

**ஜெபம்:** பிதாவே! ஜீவகாலமெல்லாம் மரணபயத்தில் வாழ்ந்துகொண்டிருப்போரின் பயத்தை நீக்க, மரணப் பிசாசை உம் குமாரனின் மரணத்தால் அழிக்கும்படி அவரை உயிரோடு எழுப்பியவரே, உமக்கு ஸ்தோத்திரம். நீர் எந்நாளும் எங்களைக் காப்பாற்றி, எங்கள் எல்லைகளக்குள்ளே வாசமாயிருப்பீராக. உமக்குப் பிரியமானவர்களாயும், உம்மோடு சுகமாய் தங்கியிருக்கிறவர்களாயும் எங்களை அர்ப்பணிக்கிறோம். இயேசுவின் நாமத்தினாலே பிதாவே, அல்லேலூயா. ஆமென்.



**தேன்-துளி வேத வசனக் கதைகள்**

(கதை-179 ஏப்ரல் 2026)

ஆசிரியர்: சகோ. எம். அசரியா ஞானதாஸ் எம்.ஏ; எம்.எட்

# வெற்றி வாழ்க்கை வாழ 3 விளக்குகள்

வேதவசன-விளக்கு, உள்ளுணர்வின்-விளக்கு, சூழ்நிலையின்-விளக்கு

இங்கிலாந்து தேசத்து துறைமுகத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஒரு சொகுசுக் கப்பலில், EGBERG என்னும் பெயர்கொண்ட ஒரு பேராசிரியர் பயணம் செய்துகொண்டிருந்தார். அவருடன் பயணம் செய்த 600பயணிகளும் கப்பலில் இருந்தபடி இயற்கை காட்சிகளை ரசித்ததோடு ஆடல், பாடல், விளையாட்டு, அரட்டை என மகிழ்ச்சியாக தங்கள் நேரத்தை செலவிட்டுக்கொண்டிருந்தனர்.

மாலை நேரம் சென்று இரவு வந்தது, விண்மீன்கள் இன்றி வானம் இருண்டது; கப்பலை காரிருள் சூழ்ந்தது. இதைக்கண்ட பயணிகள் திகிலடைந்தனர். இந்த கும்மிருட்டில் கப்பல் போய்ச்சேர வேண்டிய துறைமுகத்தை சென்றடையுமா என்ற கேள்வி அவர்களை வாட்டியது. EGBERG, அறிவியல் மற்றும் இறையியல் ஆராய்ச்சியில் ஈடுபடும் ஒரு தேவமனிதராவார். எனவே EGBERG கப்பலின் கேப்டனை அணுகி, "வானத்தில் விண்மீன்கள் இல்லாமல் இப்படி காரிருள் சூழ்ந்த நிலையில் எங்களை எப்படி இங்கிலாந்தில் கொண்டு சேர்ப்பீர்கள்?" என வினவினார். கப்பல் கேப்டனோ, மிகவும் எளிதாக, "அதோ பாருங்கள், தூரத்தில் புள்ளிகள்போல் 3விளக்குகள் தெரிகிறதே அதுதான் எனக்கு அடையாளம்; அந்த 3விளக்குகளும் நேர்கோட்டில் வரும் நிலையை அறிந்து நேர்கோட்டில் கப்பலை செலுத்தினால், கப்பல் நேராக இங்கிலாந்து துறைமுகத்துக்குள் சென்றுவிடும்." என விளக்கினார்.

இந்த பதிலை கேட்டதும் EGBERGன் பயம் நீங்கி, புதிய நம்பிக்கை பளிச்சிட்டது. அது என்னவெனில், "நம் வாழ்விலும், ஆணடவர் நமக்கு வைத்துள்ள சித்தத்தை அறிந்துகொள்ள வேதவசனம், ஆவியானவர் தரும் உள்ளுணர்வு, சூழ்நிலை ஆகிய மூன்று விளக்குகளும் நம்மை நேர்வழியில் நடத்தும்" என்பதேயாகும். கப்பல் கேப்டன் கூறியபடி இம்மூன்றும் ஒன்றாக செயல்படும்போது, தேவனுடைய பரிபூரண சித்தத்தை நாம் அறிய முடியும் என்பதே.

பிரியமானவர்களே! நம் பிள்ளைகளின் கல்வி, திருமணம், நமது பணிகள், தொழில் ஆகிய நிலைகளில், நாம் இயேசு கிறிஸ்துவின் பரிபூரண சித்தத்தின்படி செயல்பட்டு மேலான ஆசீர்வாதங்களை பெற வாழ்த்துகிறேன். வேதம் இவ்விதமாய் சொல்கிறது:

தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்.1யோவா-2:17

நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள்.எபி-10:36

தேவனுடைய சித்தத்தின்படி யாவும் உண்டாயிருக்கிறது. வெளி-4:11

கர்த்தர் தமக்கு சித்தமானதையெல்லாம் செய்கிறார்.சங்.135:6

---

M.AZARIAH GNANADOSS M.A, M.ED

EDITOR, RATCHIPPU TAMIL CHRISTIAN MONTHLY, SALIGRAMAM, CHENNAI-93. MOBILE:9962924900

இந்திய கிறிஸ்தவ திருச்சபை சரிதை

(1முதல் 21ம் நூற்றாண்டுவரை)



# இரண்டாயிரம் ஆண்டு வரலாறு
# 2ம் வருகைக்குத் தயாராகு

தொகுதி-9 பகுதி-4 எப்பிசோடு-45 ஏப்ரல் 2026

கட்டுரை ஆசிரியர்: அறிவர். திருமதி. சலோமி மனோகர்

**9. 17ம் நூற்றாண்டில் இந்திய கிறிஸ்தவம்:**

**4. நோபிலியின் எதிரிகள் - உள்ளும் புறமும்:**

<u>மதுரை மிஷனுக்குள் எதிரிகள்</u>

மிஷன் இயக்கத்தின் நடைமுறைச் சிக்கல் என்பது அதற்குள் பணியாற்றும் மிஷனரிகளுக்கு இடையேயான கருத்து வேறுபாடு மற்றும் வெளிப்புற சவால்கள் ஆகியவற்றை குறிக்கிறது. மதுரை மிஷன் எதிர் கொண்ட உள்மோதல்கள் என்பது, உளளுர் பழக்கவழக்கங்களை, குறிப்பாக பிராமணிய நடைமுறைகளை ஏற்றுக்கொள்வது தொடர்பாக மிஷனரிகளிடையே நிலவிய கருத்துவேறுபாடுகள் ஆகும். வெளிப்புற எதிர்ப்பு என்பது, மிஷனின் இருப்பு மற்றும் செல்வாக்கை எதிர்த்த பல்வேறு குழுக்களின் அச்சுறுத்தல் களை மற்றும் எதிர்ப்பை குறிக்கிறது. டிநோபிலி, பிராமணர்களின் செல்வாக்கைப் பெறுவதற்காக பிராமணராக மாறுவேடமிட்ட யுத்தி ஆரம்பத்திலேயே இந்து பிராமணர்களின் எதிர்ப்பைச் சம்பாதித்தது. உயர் சாதியைச் சேர்ந்த பலர், இந்துக்கள் கிறிஸ்தவ மதத்திற்கு மாறுவதை கடுமையாக எதிர்த்தனர், இது மிஷனுக்கு உள்ளேயும் வெளியேயும் எதிர்ப்பை உருவாக்கியது

**உள் அணுகுமுறைகளின் முரண்பாடுகள்:**

மதுரைமிஷன், பிராமணிய பழக்கவழக்கங்கள் தொடர்பான டிநோபிலியின் ‘இணக்கக் கொள்கை’யுடன் உடன்படாத பிற மிஷனரிகளிடமிருந்து, குறிப்பாக பெர்னாண்டஸிடமிருந்து எதிர்ப்பைச் சந்தித்தது. பெர்னாண்டஸ{ம் மற்றவர்களும் நோபிலியின் பிராமணிய நடைமுறை களை ஒரு புறமத வடிவமாகக் கண்டனர். மேலும் கிறிஸ்தவத்தை உள்ளுர் பழக்கவழக்கங் களுக்கு ஏற்றபடி மாற்றியமைத்த நோபிலியின் அணுகுமுறையை தீவிரமாக நிராகரித்தனர். இந்த உட்பூசல் பல விசாரணைகளுக்கு வழிவகுத்தது. சில மிஷனரி குழுக்களுடன் நோபிலிக்கு மோதல் இருந்திருக்கலாம் எனத் தெரிகிறது. மதுரை மிஷனானது, மதுரை நாயக்கர் இராஜ்ஜி யத்தின் பகுதியில் செயல்பட்டது. மதுரை மிஷனின் பணி, குறிப்பாக தாழ்த்தப்பட்ட சாதியினரை மதம் மாற்றுவதில் கவனம் செலுத்துவது என்பதால் இந்தப் பகுதியில் சமூக மற்றும் அரசியல் பதட்டங்கள் உருவாயின. நாயக்கர்களுக்கும் மைசூர் இராஜ்ஜியத்திற்கும் இடையே ஏற்பட்ட மோதலால், மிஷனின் செயல்பாடுகள் சீர்குலைந்தன.

உமிழ்நீரைக் கொண்டு தொட்டுவிட்டால் ஒருவர் தனது உயர்சாதி அந்தஸ்தை இழந்துவிடுவார் என்ற நம்பிக்கை மதமாறிய உயர்சாதி கிறிஸ்தவர்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தியது. இதன் காரணமாக பிராமண கிறிஸ்தவர்களில் 14பேர் தேவாலயம் வருவதை நிறுத்தினர். எனினும்

நோபிலிக்கு மதிப்பளித்து தேவாலய வெளிவாயில் வரை வர சம்மதித்தனர். இதன் காரணமாக தனது குடியிருப்புக்கு அருகில் ஒரு தனி தேவாலயம் கட்ட நோபிலி முடிவு செய்தார்.

**நோபிலி அனுமதித்து, கிறிஸ்தவர்கள் ஏற்றுக்கொள்ளாத நடைமுறைகள்:**

1. மறுபடிப் பிறப்பதன் அடையாளமாக, பூணூலை இடது தோள்பட்டையில் அணிந்து கொள்ள அனுமதித்தார்.
2. திருநீறு, குங்குமத்திற்கு பதில் சந்தனம் பன்படுத்த அனுமதித்தார்.
3. பிராமணர்களால் வளர்க்கப்படும் புனித முடியான குடுமியை அனுமதித்தார்.
4. சுலோகங்கள், கிறிஸ்தவ க்ரீட் ஆகியவற்றில் மாற்றங்களை ஏற்படுத்தினார்.
5. மதம்மாறிய கிறிஸ்தவர்கள் புனித நீராடுவதை அவர் தடை செய்யவில்லை.
6. மோதிரம் மாற்றுவதை நீக்கி, தாலியை திருமணத்தின் அடையாளமாக்கினார்.

கி.பி.1608ம் ஆண்டு, நோபிலி மீதான சந்தேகங்கள் தீரும்வரை, பிராமணர்களுக்கு அவர் ஞானஸ்நானம் கொடுக்க தடை விதிக்கப்பட்டது. குற்றம் சாட்டப்பட்டதால் கவனமாக செயல்பட்ட நோபிலி, மாகாண அதிகாரிகளுடன் ஆலோசனை செய்து, அவர்கள் உதவியுடன், பேராயர் ரோஸிடமிருந்து தன்னை பாதுகாத்துக் கொண்டார். நோபிலியின் பெரும்பாலான மாற்றங்கள் அனைத்தும் கிழக்கின் முதன்மை பிஷப்பான மெனிசஸின் அனுமதியின்றி செய்யப்படவில்லை.

**வெளிப்புற சவால்கள்:**

மதுரைமிஷன் ஏராளமான வெளிப்புற சவால்களையும் எதிர்கொண்டது. வரலாற்று ரீதியாக, மிஷன் பிரதேசமானது, பல்வேறு அரசியல் நிறுவனங்களால் அச்சுறுத்தப்பட்டிருந்தது. மராட்டியர்கள், மைசூர் இராஜ்ஜியம், டெக்கான் சுல்தான்கள், முகலாய இராணுவம் போன்ற இவர்கள் அனைவரும் மதுரை நாயக்கர் இராஜ்ஜியத்துடன் மோதல்களில் ஈடுபட்டனர். மதுரைமிஷன், மதுரை நாயக்கர் இராஜ்ஜியத்தின்; ஆதரவை நம்பியிருந்ததால் இவர்களால் பாதிக்கப்பட்டது. கூடுதலாக, பிரிட்டிஷார் மற்றும் பிரெஞ்சுக்காரர்கள் இப்பகுதியின் மீது கட்டுப்பாட்டைப் பெற போட்டியிட்டதால் முற்றுகைகள் மற்றும் மோதல்கள் தொடர்ந்தன.

இவ்விதமான வெளி மற்றும் உள் அழுத்தங்கள் மதுரை மிஷனுக்கு, அதன் வரலாறு முழுவதும் சிக்கலான மற்றும் சவாலான சூழலை உருவாக்கின. அடுத்த 12 ஆண்டுகளில் டி நோபிலி, தனது மூன்று மிஷன்-எதிரிகளான பிமென்டா, பெர்னாண்டஸ், பிரான்சிஸ்கோ ஆகியோரை எதிர்கொள்ள நேர்ந்தது. மதுரை மிஷன் கி.பி. 1606 - 1773 காலகட்டத்தில் 'பழைய மதுரை மிஷன்' என்றும் கி.பி. 1937 - 1952 காலகட்டத்தில் 'புதிய மதுரை மிஷன்' என்றும் மறுசீரமைக்கப்பட்டது.

இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு தொடரும்......

---

AUTHOR: DR. MRS. SALOMI MANOHAR M.A, M.PHIL, P.HD ASSISTANT PROFESSOR (RTD), (POPE'S COLLEGE, SAWYERPURAM) THIRUVANMIYUR, CHENNAI-41, SOUTH INDIA

==========================================================================

# ஜெப-ஜன்னல் ஜெப நேரங்கள் ஏப்ரல் 2026

**ஜெப-ஜன்னல்-1 காலை-ஜெபம்**

நாள்: 10-04-2026 இரண்டாம் வெள்ளி

நேரம்: காலை 5-முதல் 6-மணி வரை.

**ஜெப-ஜன்னல்-2 மதிய-ஜெபம்**

நாள்: 17-04-2026 மூன்றாம் வெள்ளி

நேரம்: மதியம் 1-முதல் 2-மணி வரை.

**ஜெப-ஜன்னல்-3 இரவு-ஜெபம்**

நாள்: 24-04-2026 நான்காம் வெள்ளி

நேரம்: இரவு 8-முதல் 10-மணி வரை.

பிரியமானவர்களே! இந்த ஜெப-ஜன்னல் ஜெப-நேரங்களில் தானி-6:10 வசனத்தின்படி "தானியேல், மேலறையில் எருசலேம் தேவாலயத்திற்கு நேராய் பலகணிகள் திறந்திருக்க" ஜெபித்ததைப் போல் நமது இயக்குநரும், ஜெப-ஜன்னல் ஜெப-வீரர்களும் ஆலயம் நோக்கி ஜெபிக்கவிருக் கிறார்கள். நீங்களும் இந்த நேரங்களில் உங்கள் ஆலயம் நோக்கி ஜெபிக்கும்படியாக அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

==========================================================================================

## DETAILS ABOUT US

### CONTACT DETAILS:


MOBILE: 9962924900/7871676100

WHATSAPP: 9789914463/7871676100

E-MAIL: sjddharmaraja@gmail.com

OUR WEBSITE: www.ratchippu.com

POSTAL ADDRESS: REV. S.J.D. DHARMARAJA, MISSION DIRECTOR, NO: 4/2-A, BARATHI ST., GANDHI NAGAR, SALIGRAMAM, CHENNAI - 93

ADDL. E-MAIL: ratchippuratchippu@gmail.com


### BANK DETAILS:

NAME: DHARMARAJA SJD.

S.B. ACCOUNT NO: 601071548.

BANK & BRANCH: INDIAN BANK, NESAPAKKAM

IFSC CODE: IDIB000N122.

BANK ADDRESS: NESAPAKKAM, CHENNAI-78.

### UPI DETAILS:

UPI NAME: GOOGL-PAY (G-PAY)

NAME: REV. DHARMARAJA SJD

G-PAY NUMBER: 9789914463

==========================================================================================

# வசன தியானம்

ஆசிரியர்: Rev. S.J.D. தர்மராஜா,
ஊழிய இயக்குநர், இரட்சிப்பு ஊழியங்கள்,

தியானம்-168 ஏப்ரல் 2026



## சங்கீதங்களில் சிலுவைக்காட்சி

### அனுதின கொண்டாட்டமாகும் ஆண்டவரின் உயிர்த்தெழுதல்

சாயங்காலத்தில் அழுகை தங்கும் விடியற்காலத்தில் மகிழ்ச்சியுண்டாகும். சங்.30:5

கிறிஸ்து பிறப்புக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட சங்கீத புத்தகத்தில், மேசியாவின் பாடு, மரணம், உயிர்த்தெழுதல் பற்றிய தீர்க்கதரிசனங்கள் அடங்கியுள்ளது வியப்புக்குறிய ஒன்றாகும். இயேசு கிறிஸ்து, பேதுரு, பவுல் ஆகியோர், சங்கீத வசனங்களை பயன்படுத்தியது சிறப்புக்குறியதாகும்.

**1.இயேசுவின் பாடு-மரணம்:** சங்கீதம்-22, சிலுவைப்பாடுகள் மற்றும் சிலுவை மரணத்தின் வேதனையை விவரிக்கிறது, இயேசுவின் மரணமானது "என் தேவனே. என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்" என்ற அவருடைய சிலுவை வசனத்தில் வெளிப்படுத்தப்பட்டு அவரது கல்லறையில் நிறைவடைந்தது. கடவுள், இயேசுவின் பாடுகளைப் புறக்கணிக்கவில்லை, மாறாக அவர் இயேசுவை உயிர்ப்பித்து, பரலோகிற்கு ஏறச்செய்து அவரை மகிமைப்படுத்தினார்.

**2.இயேசுவின் உயிர்த்தெழுதல்:** சங்கீதம்-16, சங்கீதம்-30 ஆகியவை ஆத்துமாவின் அழியாத நிலையை, குறிப்பாக இயேசுவின் உயிர்த்தெழுதலை தீர்க்கத்தரிசனமாக முன்னறிவிப்பதாக அமைந்துள்ளன (சங்.16:10, சங்.30:3). "நீர் என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர்; உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர்" (சங்.16:10) என்ற வசனத்தை அப்.2:27ல் பேதுருவும், அப்.13:35ல் பவுலும் பயன்படுத்துவது இதை ருசுப்படுத்துகிறது. தாவீது மரித்தார், அவருடைய சரீரம் அழிந்தது; இதிலிருந்து **சங்கீதம்.16:10ல் காணப்படும் 'பரிசுத்தவான்' என்ற வார்த்தை**, இயேசுவைக் குறித்துதான் எழுதப்பட்டிருக்கிறது என்பதை **பேதுருவும் பவுலும் உறுதிப்படுத்துகின்றனர்.**

"கர்த்தாவே, நீர் என் ஆத்துமாவை பாதாளத்திலிருந்து ஏறப்பண்ணி, குழியில் இறங்காதபடி என்னை உயிரோடே காத்தீர்." (சங்.30:3) என்பது, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கான தீர்க்கதரிசன அறிவிப்பாகும். "சாயங்காலத்தில் அழுகை தங்கும் விடியற்காலத்தில் மகிழ்ச்சி உண்டாகும்" (சங்.30:5) என்ற வசனத்தின் மூலம், மரணத்தின் துயரத்திலிருந்து உயிர்த்தெழுதலின் மகிழ்ச்சிக்கு வழிநடத்தும் கிறிஸ்துவின் வல்லமை, வருடம் ஒருமுறை ஆசரிக்கும் வரலாற்று நிகழ்வு மட்டுமின்றி, அது ஒரு அனுதின நிகழ்வாக மாறவேண்டியதன் அவசியத்தை சங்கீதக்காரர் வலியுறுத்துகிறார். சங்.30:5ல் காணப்படும் காலைநேர உயிர்த்தெழுதலின் மகிழ்ச்சியை சகவிசுவாசிகளோடு பகிர்ந்து கொள்ளுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

அருட்திரு. தர்மராஜா, ஊழிய இயக்குநர், இரட்சிப்பு ஊழியங்கள், சென்னை-93, தென்னிந்தியா

# செய்தித்துளிகள் ஏப்ரல் 2026

1. உலகின் மிகவும் மாசுபட்ட நாடுகளின் தரவரிசையில் பாகிஸ்தான் முதலிடத்தையும், வங்காளதேசம் 2ம் இடத் தையும், தஜிகிஸ்தான் 3ம் இடத்தை பெற்றுள்ளதாக சுவிட்சர்லாந்தின் ஐ.கு. ஏர் நிறுவன ஆய்வறிக்கையில் தகவல்.

2. இந்தியாவில் அடுத்த 74 நாட்களுக்கு தேவையான கச்சாஎண்ணெய் கையிருப்பில் உள்ளதாகவும், மேலும் ஒரு மாதத்திற்கு தேவையான சமையல் எரிவாயு (எல்.பி.ஜி) கையிருப் பில் உள்ளதாகவும் ஒன்றிய அரசு தகவல்.

3. தமிழ்நாடு சட்டசபைக்கான தேர்தல் இம்மாதம் 23ம் தேதி ஒரே கட்டமாக நடைபெறுவதை முன்னிட்டு, வாக்குப்பதிவு நாளான ஏப்ரல் 23-ம் தேதியை பொது விடுமுறை தினமாக அறிவித்து அரசாணை வெளியிட்டது தமிழ்நாடு அரசு.

4. தமிழகத்திலுள்ள தேசீய நெடுஞ்சாலைகளிலுள்ள மொத்த சுங்கச்சாவடிகள் 77. இவற்றில், 60 சாவடிகளில் இம்மாதம் முதல் (ஏப்.1) 5சதவீதம் அளவிற்கு கட்டணம் உயர்த்தப் படுவதாக தேசீய நெடுஞ்சாலை ஆணையம் தகவல்.

5. ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவுகளில் தலா 16 அணி கள் பங்குபெறும் 16வது உலகக்கோப்பை ஹாக்கி வரும் ஆக.15முதல் ஆக.30வரை பெல்ஜியம்-நெதர்லாந்தில் நடை பெறுகிறது. இதற்கான அட்டவணை வெளியிடப்பட்டது.

==========================================================================

# ஈஸ்டர் 2026
# நல்வாழ்த்துக்கள்

அன்பார்ந்த இரட்சிப்பு பத்திரிக்கையின் வாசகர்கள், ஆதரவாளர்கள், படைப்பாளர்கள், அலுவலகப் பணியாளர்கள், வலைதள பணியாளர்கள், கைபிரதி களப்பணியாளர்கள், தபால்-துறை மற்றும் அச்சகத்து நண்பர்கள் அனைத்து திருச்சபை இறைமக்கள், ஆகிய உங்கள் அனைவருக்கும் எங்கள் உள்ளம் கனிந்த ஈஸ்டர் 2026 நல்வாழ்த்துக்கள்.




இரட்சிப்பு
ஊழிய-குடும்பத்தார்